பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

02 09 2026 WEDNESDAY 6 45

தலைப்புச் செய்திகள்

1. பயங்கரவாதத்தில் இரட்டை நிலைப்பாடு இருக்கக்கூடாது என பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. கடந்த மாதத்தில் ஜிஎஸ்டி வசூல் ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 853 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

3. பொங்கல் பண்டிகைக்கான இலவச வேஷ்டி-சேலை திட்டத்திற்கு முதற்கட்டமாக 312 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு.விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

4. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ள நிலையில் வேளாண் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன.

5. ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான டுவென்டி-20 கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பயங்கரவாதத்தில் இரட்டை நிலைப்பாடு இருக்கக்கூடாது என பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

கிர்கிஸ்தானில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் முன்னிலையில் பிரதமர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பத்து நாடுகளை உள்ளடக்கிய எஸ்சிஓ எனப்படும் இந்த மாநாடு நேற்று நிறைவடைந்தது.

அப்போது பேசிய பிரதமர் பயங்கரவாத விவகாரத்தில் உறுப்புநாடுகளுக்கு இடையே இரட்டை நிலைப்பாடுகளுக்கு இடமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

அடுத்த எஸ்சிஓ மாநாட்டிற்கு பாகிஸ்தான் தலைமை வகிக்க உள்ள நிலையில் பிரதமர் தமது நிலைப்பாட்டை குறிப்பிட்டார்.

மாநாட்டின் நிறைவாக எஸ்சிஓ தலைவர்களின் கூட்டு பிரகடனமும் வெளியிடப்பட்டது.

உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தானில் தமது நான்கு நாள் பயணத்தை நிறைவு செய்து பிரதமர் திரு. நரேந்திர மோடி தாயகம் திரும்பினார்.

<<<<>>>>

*சரக்கு மற்றும் சேவை வரியான ஜிஎஸ்டி வசூல் கடந்த மாதத்தில் ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 853 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.*

*இது கடந்த ஆண்டு இதே காலத்தைவிட 14 புள்ளி எட்டு சதவீதம் அதிகம் என்று நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 116 கோடியாக ஜிஎஸ்டி வசூலாகி இருந்தது.*

*ஒட்டுமொத்த உள்நாட்டு ஜிஎஸ்டி வருவாய் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 249 கோடி ரூபாயாக அதிகரித்திருப்பதாகவும் இது*

*கடந்த ஆண்டை காட்டிலும் 9 புள்ளி 3 சதவீதம் அதிகம் என்றும் நிதியமைச்சகம் கூறியுள்ளது.*

*இறக்குமதி மூலமான ஜிஎஸ்டி வசூல் 29 சதவீதம் அதிகரித்து 62 ஆயிரத்து 604 கோடி ரூபாயாக உள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.*

*<<<<>>>>*

*நேபாள பெருவெள்ளத்தில் சிக்கி மீட்கப்பட்ட 5 பேர் நேற்று இரவு சென்னை திரும்பினர்.*

*அவர்களை மாநில அமைச்சர் திரு. சரத்குமார் வரவேற்றார்.*

*நேபாளத்தின் திபெத் எல்லையை ஒட்டி கடந்த வாரத்தில் ஏற்பட்ட பனிப்பாறை சரிவு மற்றும் பெருவெள்ளத்தால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில் அங்கு புனித யாத்திரை சென்ற தமிழகத்தை சேர்ந்தவர்களும் சிக்கி கொண்டனர்.*

*அவர்களை மத்திய அரசுடன் இணைந்து தமிழக அரசு மீட்கும் நடவடிக்கையை மேற்கொண்டது.*

*ஏற்கெனவே நேபாளத்திலிருந்து கடந்த 27 ஆம் தேதி 21 பேர் சென்னை அழைத்துவரப்பட்டனர்.*

*இந்நிலையில் சென்னையை சேர்ந்த 2 பேரும், மதுரையை சேர்ந்த 3 பேரும் சென்னை வந்தடைந்தனர்.*

*அவர்களை விமானநிலையத்தில் அமைச்சர் திரு.சரத்குமார் வரவேற்று, சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்.*

*தங்களை மீட்க உதவிய மத்திய-மாநில அரசுகளுக்கு தாயகம் திரும்பியவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.*

*<<<<>>>>*

*வரும் பொங்கல் பண்டிகைக்கான இலவச வேஷ்டி-சேலை திட்டத்திற்கு முதற்கட்டமாக 312 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.*

*சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.*

*இலவச வேஷ்டி-சேலை திட்டத்திற்கு நடப்பாண்டில் 612 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.*

*இத்திட்டத்திற்கு தேவைப்படும் நூலை கூட்டுறவு ஆலைகள் மூலம் அரசு உற்பத்தி செய்யும் என்று அவர் தெரிவித்தார்.*

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை மாறிவரும் காலத்திற்கேற்ப நவீன மயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இணையதளம் மூலம் விற்பனை செய்ய பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் திரு. விஜய் பாலாஜி கூறினார்.

<<<<>>>>

மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், டெல்டா மாவட்டங்களில் வேளாண் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடிக்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு, வேளாண் துறை மூலம்
உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் கடம்பூர் வனப்பகுதியில் நேற்று திடீரென காட்டுத்தீ பரவியது.

வறட்சி காரணமாக பரவிய இந்த தீயை கட்டுப்படுத்த வனத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோர பகுதிகளில் நிலவும் கீழ்மட்ட வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் இந்தியர் ஒருவர் உட்பட 12 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 50-ஐ தாண்டியுள்ள நிலையில் நான்காயிரம் பேரை தேடும் பணி தொடர்வதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா வலுவான பொருளாதார வளர்ச்சி அடைந்துவருவதற்கு சர்வதேச பண நிதியமான ஐஎம்எஃப் பாராட்டு தெரிவித்துள்ளது

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை ஒழிக்க தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே சாலை விபத்தில் உயிரிழந்த நான்கு குழந்தைகளின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியாக தலா 3 லட்சம் ரூபாய்க்கான நிதியை மாவட்ட ஆட்சியர் திருமதி.துர்கா மூர்த்தி வழங்கினார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தாட்கோ மேளாண் இயக்குநருமான திரு.கந்தசாமி தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

பள்ளி மாணவர்களுக்கிடையே காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ராணிப்பேட்டை மாவட்ட பள்ளி ஆசிரியர்களுக்கான 3 நாள் பயிற்சி பட்டறையை ஆட்சியர் திருமதி.பிரியா ரவிச்சந்திரன் நேற்று தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி கோயிலில் உண்டியல் வருமானம் ஒன்றரை கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னையில் மண்டல அளவிலான அஞ்சலக குறைதீர்ப்பு முகாம் வரும் 15-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

<<<<>>>>

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான டுவென்டி-20 கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான 15 பேர் கொண்ட அணியில் திலக் வர்மா துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பும்ரா, நிதிஷ்குமார் ரெட்டி, வாஷிங்டன் சுந்தர், ஹர்ஷித் ராணா ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

தில்லியில் இந்தியா-ஆப்கானிஸ்தான் அணிகள் மோதும் முதலாவது டுவென்டி-20 கிரிக்கெட் போட்டி வரும் 13 ஆம் தேதி நடைபெற உள்ளது.

இரண்டாவது போட்டி வரும் 15 ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதி போட்டி 17 ஆம் தேதியும் நடைபெற உள்ளன.

<<<<>>>>